# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR

| | | |
|---|---|---|
| CC. | : | 57/ 2024 |
| Deposition of Witness for | : | PW. 1 (LW- 1 ) |
| Name | : | விஜயலட்சுமி |
| Husband's/Father's Name | : | **முருகேசன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜரில்லை எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 14th day of October 2025.**

**முதல் விசாரணை**:

நான் சுக்காலியூரில் குடியிருந்து வருகின்றேன். 09.04.2023-ம் தேதி பகல் 3.30 மணியளவில் எனது தகப்பனார் பொம்முராஜ் என்பவர் அவருக்கு சொந்தமான TN 47 BA 6055 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் சுக்காலியூர் - கரூர் சாலையில் கருப்பம்பாளையம் பிரிவு ரோடு அருகில் வந்தபோது மதுரையிலிருந்து கரூர் நோக்கி தெற்கிலிருந்து வடக்காக வந்த கார் எனது தகப்பனார் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. அவரை அருகிலிருந்தவர்கள் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கரூர் ராஜ் ஆர்த்தோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்துள்ளனர். சம்பவம் குறித்து எனக்கு தகவல் வந்தது. நான் சென்று எனது தகப்பனாரை பார்த்தேன். அவர் மயக்கமாக இருந்தார். நடந்த சம்பவம் குறித்து தாந்தோணிமலை போலீசார் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரில்ர பார்க்கவில்லை. எப்படி விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். காரை ஓட்டிய நபரை எனக்கு அடையாளம் தெரியாது. புகார் நான் கைப்பட எழுதிக் கொடுத்தேன். எனக்கு தகவல் கொடுத்த நபர் எனக்கு யார் என்று ஞாபகம் இல்லை. சம்பவம் நடைபெற்று சுமார் 1 /4 மணி நேரம் கழித்து நான் மருத்துவமனைக்கு சென்றேன். ராஜ் ஆர்த்தோ மருத்துவமனையில் முதல் உதவிசிகிச்சை பெற்று அதன் பின்பு கோவைக்கு எ னது தகப்பனாரை அழைத்து சென்றோம். முதல் சிகிச்சை பெறப்பட்டது சுமார் 1/4 மணி நேரம் இருக்கும் என்றால் சரிதான். தாந்தோணிமலை போலீசார் என்னை ராஜ் ஆர்த்தோ மருத்துவமனையில் விசாரித்தார்கள். அப்போது இரவு 7 மணி இருக்கும். நான் சொல்வது போல் என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர் எனது தகப்பனார் என்பதால் நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br><br>(ஒம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**

| | | |
|---|---|---|
| CC. | : | 57/ 2024 |
| Deposition of Witness for | : | PW. 2 (LW- 2 ) |
| Name | : | பொம்முராஜ் |
| Husband's/Father's Name | : | நாகப்ப நாயக்கர் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜரில்லை எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு.317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 14th day of October 2025.**

**முதல் விசாரணை**:

நான் சுக்காலியூரில் குடியிருந்து வருகின்றேன். நான் விவசாயம் செய்து வருகின்றேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் சுமார் 3 மணியளவில் TN 47 BA 6055 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் நான் சுக்காலியூரிலிருந்து கரூர் நோக்கி வந்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு எதிர் திசையில் ஒரு கார் வேகமாக வந்து என் மீது மோதிவிட்டது. நான் கருப்பம்பாளையம் பிரிவு சாலையில் ஓரமாக நின்றுகொண்டிருந்தபோது எதிரில் வந்த கார் மோதியது. விபத்து ஏற்பட்டு நான் கீழே விழுந்துவிட்டேன். மயக்கமாகிவிட்டது. நான் காரை ஓட்டிய நபரை பார்க்கவில்லை. நான் மயக்க நிலையில் இருந்தததால் என்னை யார் சிகிச்சையில் சேர்த்தார்கள் என்று தெரியாது. கடைசியாக நான் கோவை KMCH மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். இது சம்பந்தமாக தாந்தோணிமலை போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

கருப்பம்பாளையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலையை கடந்து பாலமுறை வந்துள்ளேன். விபத்து ஏற்ப ட்ட இடத்தில் சாலையின் நடுவில் போலீசார் தடுப்பு அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான் அந்த இடத்தில் மதுரையிலிருந்து வரக்கூடிய வாகனங்கள்சிறிது நிதானித்துத்தான் செல்ல முடியும் என்றால் சரிதான். சம்பவமானது சாலையின் நடுவில் நடைபெற்றதா என்றால் அவ்வாறு இல்லை. சாலையின் ஓரத்தில்தான் நடைபெற்றது. கார் மெதுவாகத்தான் வந்தது என்றும், நான்தான் திடீரென்று சாலையை கடந்து விபவத்தை வரவழைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணமே என்னுடைய கவனக்குறைவுதான் என்றாலும், கார் ஓட்டுனரின் மீது எந்த தவறும் இல்லை என்றாலும் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br><br>(ஒம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |